**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**KILVELUR**

**CC 391/2023**

LW 13 PW4

| Name | ஆனந்தி ( DSP Finger print ) | Caste | |
|---|---|---|---|
| Father's/Husband Name | சேகர் | Calling | |
| Village | நாகப்பட்டினம் | Religion | |
| Taluk | | Age | 49/2025 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**16-10-2025**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக ( விரல் ரேகை நிபுணர் ) பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.11.2022 ம் தேதி 19.00 மணிக்கு கீழையூர் காவல் நிலைய குற்ற எண் 313/2022 ச.,பிரிவுகள் 457 r/w 394 IPC என்ற வழக்கில் எங்களுக்கு வந்த தகவலின் பேரில் குற்ற நிகழ்விடத்தை பார்வையிட்டு, உதவி ஆய்வாளர் சங்கவி மற்றும் நானும் அதற்கான உபரகணங்களை எடுத்து கொண்டு குற்ற நிகழ்விடத்தில் விரல் ரேகை பதிவுடன் ஸ்டீல் பீரோ மற்றும் பிளாஸ்டிக் பாக்ஸ், மரக்கதவுகள், மொபைல் கவர் ஆகியவைகளை பார்வையிட்டு, விரல் ரேகை பதிவு எடுக்கப்பட்டது. அதனை ஆய்வு செய்து அறிக்கையாக நான் சமர்ப்பித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி அறிக்கை நான் சமர்ப்பித்தது தான். **விரல் ரேகை பதிவு ஆய்வறிக்கை அ.சா. ஆ. 4 ஆக -குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அறிக்கையின் 12 வது காலத்தில் ஒப்பீடு பார்ப்பதற்கு தகுதி யற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஆய்வு செய்த பகுதிகளில் சரியாக பதிவுகள் எடுக்க முடியாது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்த ஆய்வும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,-
கீழ்வேளூர்.